## <u>கம்பம் நகராட்சி</u>

2018–ஆம் ஆண்டு ஜீலை மாதம் ஆம் நாள் (31.07.2018) செவ்வாய்கிழமை **பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## <u>கூட்டப் பொருட்கள்</u>

| | |
|---|---|
| 1. | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 7/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| 2. | நகராட்சி பொறியாளர் அவர்களின் 7/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| 3. | இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் வாகனமான டிராக்டர் மற்றும் டிரைலர் டி.சி.யு **9465** மற்றும் டி.சி.யு **9769** க்கான சாலைவரி **31.03.2018** உடன் முடிவடைந்து விட்டது. இதனை **01.04.2018** முதல் **31.03.2019** வரையிலான ஓராண்டு காலத்திற்கு மண்டல போக்குவரத்து அலுவலகத்திற்கு ரூ.5000/– (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு – 1)** மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.336/2018/இ1) |
| 4. | இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டிராக்டர் டி.சி.யு **9465** வாகனத்திற்கான பேட்டரி பழுதாகி விட்டதால் **100** ஆம்ஸ் **12** வோல்ட்டேஜ் புதிய பேட்டரியுடன், மெயின்வயர், எர்த்வயர், டர்மனல் இரண்டும் புதிதாக வாங்கி பொருத்துவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. **9500/–** க்கு (ரூபாய் ஒன்பதாயிரத்து ஐநூறு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு :– 1)** மன்றம் அனுமதிக்கலாம்<br>2) மேற்கண்ட குடிநீர் வாகனத்தின் அத்தியாவசிய அவசியம் கருதி பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் அவசர தேவையுள்ளதால், மேற்படி பணிக்கு அவசரஅவசியம் கருதி உள்ளுர் விலைப்புள்ளி பெற்று ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.336/2018/இ1) |
| 5. | இந்நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு எண். டி.என். 60 V 2194 வாகனத்திற்கு காப்பீடு காலம் **10.07.2018** தேதி முதல் புதுப்பிக்க வேண்டி உள்ளது. மேற்படி வாகனத்திற்கு கம்பம் ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி (பி) வாகன காப்பீட்டு நிறுவனத்திற்கு காப்பீடு புதுப்பிப்பு கட்டணம் ஒரு ஆண்டு காலத்திற்கு ரூ.**12,269/–**ஐ (ரூபாய் பன்னிரண்டாயிரத்து இருநூற்று அறுபத்து ஒன்பது மட்டும்) செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | அலுவலகக் குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண்.336/2018/இ1) |

**6.** இந்நகராட்சி தனி அதிகாரியின் முன் அனுமதியின்படி, இந்நகராட்சிக்குச் சொந்தமான பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 60 T 4507 டம்பர் பிளேசர் லாரிக்கு MRF 7x50/16 சைஸ் டயர்கள் ஆறு புதியதும், ஆறு புதிய டியூப் மற்றும் ஆறு பிளாப்களை புதியது வாங்கி வண்டியில் மாட்டி பொருத்துவதற்கு **06**.07.2018–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | டயர் ஒன்றின் விலை (வரிகள் உள்பட) ரூ |
|---|---|---|
| 1. | பெரியார் பேட்டரி சென்டர்,<br>444–A2,குமுளி ரோடு, குலாளர் மண்டபம் எதிரில் கம்பம். | 15.000/-(ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) |
| 2 | விநாயகா பேட்டரிஸ்,<br>431ஏ,எல்.எப்.ரோடு, யுவராஜா தியேட்டர் எதிரில், கம்பம். | 15,500/- (ரூபாய்பதினைந்தாயிரத்து ஐந்நூறு மட்டும்) |

**அலுவலகக்குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள உரிமையாளர் பெரியார்பேட்டரி சென்டர்,கம்பம் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் (ந.க.எண்.1988/2018/எச்1)

**7.** இந்நகர்மன்ற தீர்மான எண்.**1386** நாள் **15.12.2017**–ன்படி, இந்நகராட்சி பொது சுகாதாரபிரிவிற்கு தேவையான தளவாட சாமான்கள் **2017–18** ஆம் ஆண்டிற்கு சப்ளை செய்ய **20.06.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றஇரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | தளவாட சாமான்கள் | புண்ணியம் ஹார்டுவேர்ஸ் **&** கேன் பேரல் | M.P.J.V. டிரேடர்ஸ் |
|---|---|---|---|
| | | (பொருள் ஒன்றிற்கு விலைவிகிதம்) ரூ. | |
| 1. | கூட்டுமார் | 650.00 | 680.00 |
| 2. | வார்கால் கரண்டி | 350.00 | 365.00 |
| 3. | இரும்புத்தட்டு | 110.00 | 130.00 |
| 4. | கை ஒடு | 110.00 | 135.00 |
| 5. | முள்கம்பி (5 பல்) | 750.00 | 760.00 |
| 6. | கடப்பாறை – 1 .1/4 இஞ்ச் | 640.00 | 640.00 |
| 7. | இரும்பு வாளி (10லி) | 190.00 | 210.00 |
| 8. | மண்வெட்டி | 470.00 | 510.00 |
| 9. | கூட்டு பிரஸ் | 380.00 | 410.00 |
| 10. | அரிவாள் | 460.00 | 490.00 |
| 11. | தென்னை மார் | 30.00 | 45.00 |
| 12. | இரண்டு பல் முள் | 650.00 | 710.00 |
| 13. | அலுமினிய கூடை | 600.00 | 660.00 |

| | |
|---|---|
| | **அலுவலகக் குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள புண்ணியம் ஹார்டுவேர்ஸ் **&** கேன் பேரல் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம் **(ந.க.எண்.3412/2016/எச்1)** |
| **8.** | தூய்மை இந்தியா திட்டம், சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு மேம்பாட்டு பணிகள் செய்திட அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.**336.00** இலட்சத்தில் IEC Activities ரூ.**5.38** இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் நாளது தேதி வரை ரூ.**2.00** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது போக மீதம் **3.38** இலட்சம் இருப்பில் உள்ளது. எனவே இந்நகராட்சி பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், நகரை தூய்மையாக வைக்கவும், குப்பை கழிவுகளை மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என பிரித்து வழங்குவதற்கு பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கைபிரதிகளை அச்சடித்து அனைத்து குடியிருப்புகளுக்கு வழங்கவும், அனைத்து வார்டுகளிலும் விளம்பர பலகை வைப்பதற்கு மேற்படி தொகையிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.**2.00** இலட்சத்திற்கும் மற்றும் உள்ளூர் மற்றும் வெளியூர் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர அவசியம் கருதி ஆணையர்/தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். (ந.க.எண். 3136/2014/எச்1) |
| **9.** | கம்பம் நகராட்சி பகுதியில் உருவாகும் திடக்கழிவுகளை மக்கும் குப்பைகளை தனியாகவும், மக்காத குப்பைகளை தனியாகவும் பிரித்து சேகரிக்கும் பணி நடைபெற்றுவருவதால், பிரித்து சேகரிக்கப்பட்ட மக்கும் குப்பைகளிலிருந்து தயாரிக்கப்பட்ட கலவை உரத்தில் உள்ள வேதிப்பொருட்களையும், அவற்றின் அளவுகளையும் பகுப்பாய்வு செய்வதற்கு Green Link Analytical and Research Laboratory India Private Limited, Coimbatore நிறுவனத்திற்கு அனுப்பி வைப்பதற்கும், அம்மாதிரி (Sample ) எடுத்து பகுப்பாய்வு செய்து ஆய்வு அறிக்கை ( Lab Report) பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.6500/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** 1)மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர, அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று மேற்படி நிறுவனத்திற்கு மாதிரி அனுப்புவதையும் அதற்காகும் செலவினத்தொகை வழங்குவதையும் மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.3136/2014/எச்1)** |
| **10.** | கம்பம் நகராட்சி பகுதியில் டெங்கு காய்ச்சல் பரவுவதை தவிர்க்கும் பொருட்டு, இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் DBC பணியாளர்கள் 36 நபர்களை தற்காலிகமாக தேனி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8977/2016/இ2, 16.05.2017—இன்படி ஒரு நாளைக்கு ஒரு பணியாளருக்கு ரூ.208/— வீதம் இந்நகர்மன்ற தீர்மான எண்.1252 நாள்:30.06.2017—இல் |

| | |
|---|---|
| | ஆகஸ்ட் 2017 முதல் ஜுலை 2018 வரை உள்ள காலத்திற்கு அனுமதி பெறப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர். தற்போது காலம் முடிவடைகிறது, மேலும் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ந.க.எண்.2571/2017/ஜே1, 28.11.2017–ஆம் தேதிய கடிதத்தில் வருடம் முழுவதும் 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் வீதம் DBC பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தி நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ள அறிவுரை வழங்கப்பட்டுள்ளதால், தேனி, மாவட்டஆட்சித்தலைவர் அவர்களின் ந.க.எண்.8977/2016/இ2, 11.06.2018–இன்படி தினக்கூலி அடிப்படையில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு ரூ.225/– வீதம் ஆகஸ்ட் 2018 முதல் ஓராண்டு காலத்திற்கு ஏற்கனவே பணியாளர்களை வழங்கி வரும் அந்திமல்லி மகளிர் குழுவிடம் 63 DBC பணியாளர்களை பெற்று நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், அதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**அவசர அவசியம் கருதி தனிஅதிகாரியின் முன் அனுமதி பெற்று ஏற்கனவே பணியாளர்களை வழங்கிய அந்திமல்லி சுயஉதவிக்குழுவிற்கே உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.**1000/2015/எச்1**)** |
| **11.** | இந்நகராட்சிக்கு சொந்தமான மினிலாரி டி.எண்.60 ஒய் 1959 இல் பேட்டரி பழுதடைந்து விட்டது. எனவே மேற்படி பேட்டரி 12 வேல்டேஜ் உள்ள புதிய பேட்டரி வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ 12000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று விலைப்புள்ளி கோரவும் மன்றம்அனுமதிக்கலாம் **(ந.க.எண்.**1277/2018/எச்1**)** |
| **12.** | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4504 டம்பர் பிளேசர் லாரிக்கு **02.07.2018** உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,15,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)** அவசர அவசியம் கருதி ஆணையாளர் மற்றும் தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தகுதிச்சான்று பெறுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 1988/2018/எச்1) |

| | |
|---|---|
| **13.** | இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் உள்ள கீழ்கண்ட வாகனங்களுக்கு இன்சூரன்ஸ் காலம் முடிவடைவதால் மேலும் ஒரு ஆண்டிற்கு இன்சூரன்ஸ் கட்டண தொகை செலுத்தக் கோரி வரலான ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனியின் கடிதத்தின்படி ரூ.**2,28,623/–**ஐ செலுத்த மன்ற அனுமதி கோரப்படுகிறது.<br>1) TN 60 T 4504 - ரூ.32,362/-<br>2) TN 60 T 4507 - ரூ.31,891/-<br>3) TN 60 T 4524 - ரூ.33,041/-<br>4) TN 60 Z 3591 - ரூ.31,008/-<br>5) TN 60 Y 1959 - ரூ.20,139/-<br>6) TN 60 X 0500 - ரூ.39,923/-<br>7) TN 60 W 0778 - ரூ.40,259/-<br>-----------------<br>ரூ. 2,28,623/-<br>————————— |
| | **அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2)**அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை செலுத்துவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.**2211/2018**/எச்**1**) |
| **14** | இந்நகராட்சி தனி அதிகாரியின் முன் அனுமதியின்படி, கம்பம் நகராட்சிக்குட்பட்ட சேனை ஓடை, ஏகலூத்து ஓடை மற்றும் சுருளிப்பட்டி ரோடு ஆகியவற்றை ஜேசிபி அல்லது கிட்டாட்சி இயந்திரம் மூலம் தூர்வாருவதற்கு, தற்போது உரக்கிடங்கில் குப்பை கழிவுகளை ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொண்டு வரும் திரு தங்கராஜ் TASK எர்த் மூவர்ஸ், நிறுவனத்தினரிடம் ஒப்புதல் கடிதம் பெற்று, மேற்படி பணியை மேற்கொள்வதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–க்கு அனுமதி பெறப்பட்டு, மேற்காணும் நிறுவனத்தினருக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டது. தற்போது மேற்படி பணியினை செய்தமைக்கு செலவுத் தொகை ரூ.3,62,040/–க்கு பட்டியல் வரப்பட்டுள்ளது. எனவே மேற்காணும் பட்டியல் தொகை ரூ.3,62,040/–ல் ஏற்கனவே அனுமதி பெறப்பட்ட தொகை ரூ.1,00,000/– போக மீதத் தொகை ரூ.2,62,040/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலகக்குறிப்பு**: 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்றும், பொது சுகாதார அவசர அவசியம் கருதி மேற்காணும் பணியினை செய்த திரு தங்கராஜ் TASK எர்த் மூவர்ஸ், கம்பம் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.482/2018/எச்1) |

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
**ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 31.07.2018**
**இடம். கம்பம்**